சிலாக்கியங்களுக்காக அவருக்கு நாம் என்னத்தை செலுத்துவோம்! “உனக்காக நான் மரித்தேனே எனக்காக நீ என்ன செய்தாய்” என்ற தொனி நம் காதில் எப்போதும் விழுந்து கொண்டேயிருக்கட்டும். மகதலேனா மரியாளைப் போல் இயேசுவை விட்டு விலகாதிருப்போமானால் பெண்ணாக பிறந்திருக்கிற நாமும் பாக்கியவதிகளாக, அநேகருக்கு பாக்கியங்களைக் கொண்டு செல்லுகிறவர்களாக இருப்போம். கர்த்தர் தாமே நம்மை நற்கந்தமாக மாற்றுவாராக!






கிறிஸ்துவின் சபை ஊழியர்களின் ஐக்கியக்கூட்டம் 27-29 மே 2013 கொடைக்கானல் கலந்து கொண்ட ஊழியர்களுக்கு சகோ. ஜான் எஸ். நாதன் அவர்கள் தன்னுடைய பிறந்த நாள் பரிசாக சஃபாரி வஸ்திரம் கொடுத்து உற்சாகப்படுத்தினார்

## ஆசிரியர் கடிதம்

வாசகர்களாகிய உங்கள் யாவருக்கும் ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்கள். இவ்விதழை தாங்கி வரும் அனைவருக்கும் நன்றி செலுத்துகிறோம். உங்களுடைய உதவி கர்த்தரை அறியாத அநேகருக்கு உதவியாயிருக்கிறது. அநேகர் சத்தியத்தை அறிந்து சந்தோஷப்பட்டு எங்களுக்கு கடிதம் எழுதுகிறார்கள்.

உங்களுடைய நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் இவ்விதழ் தேவைப்பட்டால் அவர்களுடைய முகவரியை எங்களுக்கு எழுதி தெரியப்படுத்துங்கள். நாங்கள் அவர்களுக்கு இந்த மாத இதழை அனுப்பிவைப்போம்.


தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களிலும் கர்த்தருடைய சபை இருக்கவேண்டுமென பிரயாசப்படுகிறோம். இதற்கு உதவிசெய்ய விரும்புகிறவர்கள் எங்களோடு தொடர்பு கொள்ளவும். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

ஆசிரியர்



இரட்சிக்கப்படுவான்” என் திருமறை நமக்குப்போதிக்கிறது (ரோம.10:13). நீங்கள் கர்த்தருடைய நாமத்தை மட்டும் இப்பூமியில் தொழுதுகொண்டு வருகின்றீர்களா? அப்படித்தொழுது கொள்ளுவீர்களானால் நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள். மற்றபடி உங்களுடைய விசுவாசம் வீணாயிருக்கும். சமாரியா பெண்ணிடம் கர்த்தர் பேசும்போது; “நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது. உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்” என்றார் (யோவா.4:23,24). உங்களுடைய தொழுகை எப்படிப்பட்டதாயிருக்கிறது? நீங்கள் இவ்வசனத்தின்படி தொழுது கொண்டால் இரட்சிக்கப்படுவீர்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

### ஜெபியுங்கள்



- சென்ற மாதம் நம்மை சுகத்தோடும் பெலத்தோடும் பாதுகாத்த தேவனுக்கு நன்றி சொல்லி...
- விரைவில் வெளிவரவுள்ள ஆவிக்குரிய புத்தகத்திற்காக...
- வானொலி செய்தியை தொடர்ந்து கேட்டுவரும் கண்பார்வையற்ற நேயர்களுக்காக...
- மாவட்ட ஊழியர்களுக்காக...
- தொலைக்காட்சி நேயர்களுக்காக...
- பிள்ளைகளின் படிப்பிற்காக மற்றும் தேவைகள் சந்திக்கப்பட...
- மழைக்காகவும் தேசம் கர்த்தரை அறிந்துகொள்ளவும்...

### வேத அறிவுப்போட்டி: 153 -ன் விடைகள்

| | |
|---|---|
| 1. அன்புகூருவாயாக | - லேவி.19:18 |
| 2. பவுல் | - கொலோ.4:4 |
| 3. மோசே | - எண்.11:8 |
| 4. தெசலோனிக்கேய | - 1தெச.2:19 |
| 5. கூடாது | - உபா.22:10 |
| 6. தீமையினின்று | - 2தெச.3:3 |
| 7. யோசுவா | - யோசு.24:20 |
| 8. நித்திய ஜுவனைப் | - 1தீமோ.6:12 |
| 9. யெப்தா | - நியா.11:39 |
| 10. ஒநேசிமு | - 2தீமோ.1:17 |

### வேத அறிவுப்போட்டி: 153-ல் வெற்றி பெற்றவர்கள்

| | |
|---|---|
| 1. Tmt. மரகதம் திரவியம் | - கோம்பை |
| 2. T. இராஜாத்தி | - கோம்பை |
| 3. Bro. சாலொமோன் | - கோடை |
| 4. D. டேவிட் | - சென்னை |
| 5. R. ரமேஷ்குமார் | - திருப்பூர் |
| 6. IRA. எதிராசன் | - சங்கரி |
| 7. K. மோகன் | - கு.பாளையம் |

வெயது முதல் 14 வயது வரையுள்ள திக்கற்ற பிள்ளைகளை சேர்க்க தொடர்பு கொள்க:
Bro.Balarama, Cell:9994454724
CHENGALPTTU

